**இலங்கை கரம் சம்மேளனம் - 2022**

---------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை கரம் சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று , வருமான செலவுக் கூற்று , திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க கட்டளைகளின் (iii) ஆம் பிரிவின் 7(xiii) ஆம் பந்தியின் பிரகாரம் | சம்மேளனத்தினால் சான்றளிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் மேற்குறிப்பிட்டபடி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2022 ஜுன் 17 முதல் சம்மேளனத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2023 ஜுன் 21 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தனர். சம்மேளனத்தின் பதிவு 2021 பெப்ரவரி 05 முதல் 2022 ஜுன் 16 வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு அதன் கண்காணிப்பு அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம ஒப்படைக்கப்பட்டிருந்தது. | செயற்குழுவின் புதிய நிர்வாகிகள் 2022 ஜுன 17 முதல் நியமிக்கப்பட்டனர். EXCO இன் கடந்த கால அதிகாரிகள் சம்மேளனத்திற்கு சொந்தமான எவ்வித முன்னைய ஆவணங்களையும் புதிய EXCO அதிகாரிகளிடம் ஒப்படைக்கவில்லை. இதனால், நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. | சம்மேளனம் ஒவ்வொரு ஆண்டும் நிதிக்கூற்றுக்களை முறையாகத் தயாரிக்க வேண்டும். அத்துடன் விளையாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டின்படி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ)சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் | சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் மாற்றம் எதிர்பார்க்கப்படுமானால், தற்போதைய தேய்மானக் கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், இருப்பினும் ரூபா 2,061,520 பெறுமதியான சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட பிழையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் இவை முழுமையாக தேய்மானமிடப்பட்டமை என்பதுடன் சம்மேளனத்தில் மேற்படி சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் பௌதீக ரீதியாக காணப்படவிலலை. | முந்தைய EXCO உறுப்பினர்கள் சம்மேளனத்திற்கு சொந்தமான சொத்து, பொறி மற்றும் உபகரணங்களை புதிய EXCO இற்கு ஒப்படைக்காமையே இதற்கு காரணமாகும். | எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரகாரம முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்**

| கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) செலுத்த வேண்டிய வாடகை | 1,950,000 | வாடகை ஒப்பந்தம் மற்றும் பட்டியல்கள் | புதிய அதிகாரிகளிடம் எந்தவொரு ஆவணமும் ஒப்படைக்கப்படாததால், உரிய ஆவணத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | செலுத்த வேண்டியவற்றை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (ஆ) செலுத்த வேண்டிய மாவட்ட அபிவிருத்தி செலவு | 26,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) அனுமதிக் கட்டண வருமானம் | 102,600 | பற்றுச்சீட்டுக்கள் | இந்த வருமானம் பங்கேற்பாளர்களால் தேசிய போட்டிகளுக்காக சம்மேளனத்திற்கு ஆன்லைனில் அனுப்பப்பட்டன. எதிர்காலத்தில் ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டுக்கள் தொடர்பான சிக்கல் இருக்கும். | வருமானங்களை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (ஈ) பெற வேண்டிய மீதி | 30,180 | சுயாதீன உறுதிப்படுத்தல்கள் | கையில் உள்ள பணம் ரூபா 30,180 புதிய | பெற வேண்டிய மீதிகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படாததுடன் இத்தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (உ) சேமிப்புக் கணக்கு மீதி | 1,122 | உறுதிப்படுத்தல் மற்றும் வங்கிப் புத்தகம் | வங்கிப் புத்தகம் புதிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படாமையால், அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கி மீதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) ஏனைய செலுத்த வேண்டியவை | 4,850 | மீதி உறுதிப்படுத்தல் | புதிய அதிகாரிகளிடம் எந்தவொரு ஆவணமும் ஒப்படைக்கப்படாததால், மீதி உறுதிப்படுத்தலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |

### 1.5.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,223,530 கிரயமான சொத்து பொறி மற்றும் உபகரணங்கள் சம்மேளனத்தில் பௌதீக ரீதியாக காணப்படாமையால், சொத்துக்களை பௌதீக ரீதியில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | குறிப்பிட்ட சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை கையகப்படுத்தவும், நடைமுறையல்லாத சொத்துக்கள் உள்ளனவா என்பதை சரிபார்க்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 102,698 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 26,820 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 75,878 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த செலவுகள் ரூபா 507,978 ஆல் மற்றும் மொத்த வருமானம் ரூபா 432,100 ஆல் அதிகரித்தமை இப்பின்னடைவிற்கு காரணங்களாக இருந்தன.

## 3. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 3.1 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 1,950,000 ஆன வாடகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை மற்றும் செலுத்த வேண்டிய மாவட்ட அபிவிருத்திச் செலவுகள் ரூபா 26,000 நடைமுறை பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இந்த தொகைகள் தொடர்பாக சம்மேளனத்திடம் பணம் செலுத்துவதற்கான கோரிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டியவற்றை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |